**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | **111/2022** |
| | | P/W's | : | **PW2** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | ஆண்டி | CASTE | : | |
| S/O | சடைமாயத்தேவர் | RELIGION | : | இந்து |
| VILLAGE | தும்பிச்சம்பட்டி | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | **66** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 03.02.2026**

<u>குறுக்கு விசாரணை</u>

1. நான் எதுவும் படிக்கவில்லை. நான் பால் வியாபாரம் செய்து வருகிறேன். நான் ராமச்சந்திரனின் அப்பா காலத்திலிருந்து அவர்கள் வீட்டில் வேலை செய்து வருகிறேன் என்றால் சரிதான். ஆரம்பத்தில் சங்கம ரெட்டியாரிடம் வேலைபார்த்து அவரது காலத்திற்குபின் ராமச்சந்திரனிடம் 2000 ம் ஆண்டு வரை வேலை பார்த்து அதற்குப்பின் நடராஜன் என்பவரிடம் தற்போது வரை வேலை பார்க்கிறேன் என்றால் சரிதான்.

2. ராமச்சந்திரன் இறக்கும்போது அவருக்கு சுமார் 82, 83 வயதிருக்கும். ராமச்சந்திரன் இறக்கும்வரை வயயோதிகத்தாலும், மூட்டு வலியாலும் நடக்கமுடியாமல் வீட்டிலேயே இருந்தார் என்றால் வீட்டிற்கு வெளியே நடமாட மாட்டார், வீட்டிற்குள்ளேயே கம்பு ஊண்டி நடப்பார். ராமச்சந்திரனுக்கு தேவையான அனைத்தும் நடராஜன் தான் செய்துவந்தார் என்றால் சரிதான். நான் சாட்சி அளிக்குமாறு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை, 2 ம் வாதி அழைத்ததால் வந்தேன்.

3. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ளவை நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. உயில் தயார் செய்ய நடராஜன்தான் வழக்கறிஞரை அழைத்துவந்தார் என்றால் சரியல்ல, 2 ம் வாதிதான் அழைத்துவந்தார். உயிலில் உள்ள சங்கதிகள் 2 ம் வாதி சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல, ராமச்சந்திரன் தான் சொன்னதன்பேரில் வீட்டில் எழுதி தயார் செய்யப்பட்டது. உயில் வீட்டில் வைத்துதான் எழுதப்பட்டது என்றால் சரிதான். உயில் எழுதப்பட்ட நேரம் என்னவென்றால் மதியம் 12.00 மணியளவில் எழுதப்பட்டது.

4. ராமச்சந்திரன், மற்றொரு கே.ஜி. ராமச்சந்திரன், நான் மற்றும் வழக்கறிஞர் அங்கு இருந்தோம். உயில் எழுத தொடங்கும்போதே நான் அங்கு இருந்தேன் என்றால் சரியல்ல, உயில் எழுதியபின் என்னை அழைத்தார்கள் நான் அங்கு சென்றேன். உயில் எழுதும்போது நான் அங்கு இல்லாததால் உயில் எப்போது யார் சொல்லி யாரால் எழுதப்பட்டது என்ற விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல, ராமச்சந்திரன் சொல்லி எனக்குத்தெரியும்.

5. ராமச்சந்திரன் உயிலில் எத்தனை பக்கங்களில் கையெழுத்து செய்துள்ளார் என்றால் 5 பக்கங்களில் கையெழுத்து செய்தார். உயில் தயார் செய்தபோது நான் அங்கு இல்லை, ஆனால் நான் அங்கு சென்றபின்புதான் ராமச்சந்திரன் உயிலில் கையெழுத்து செய்தார். ராமச்சந்திரனிடமிருந்து எதற்காக நடராஜனிடம் வேலைக்கு சேர்ந்தேன் என்றால் ராமச்சந்திரனின் மனைவி இறந்தபின் அங்கு உணவு செய்ய ஆள் இல்லை. 1ம் வாதி உணவு தயார் செய்து கொடுத்ததால் அங்கு வேலைக்கு சென்றுவிட்டேன்.

6. நான் தற்போது செய்யும் தொழிலுக்கு நடராஜன் தான் பணஉதவி செய்கிறார் என்றால் சரியல்ல, நான் அவரிடம் வேலை செய்கிறேன். ராமச்சந்திரனிடம் நான் வேலை செய்தபோது அவருக்கும் அவர் மகனுக்குமிடையே நடந்த குடும்ப விஷயங்களில் தலையிட்டு பிரச்சனை ஆனதால் என்னை வீட்டை விட்டு அனுப்பி விட்டார்கள் என்றால் சரியல்ல. நானும் வாதிகளும் இறந்து போன ராமச்சந்திரனும் ஒரே ஊரில் இருந்தோம் என்றால் சரிதான், நடராஜன் வீடு கட்டியபின் ராமச்சந்திரன் வீட்டிலிருந்து நடராஜன் வீட்டிற்கு சென்று விட்டேன்.

7. உயிலை தயார் செய்த வழக்கறிஞர் எந்த ஊரைச்சேர்ந்தவர் என்பது எனக்குத்தெரியாது, அவர் பெயர் குருசாமி என்பதுமட்டும் தெரியும். ராமச்சந்திரன் இறப்பதற்கு சிறிது காலம் முன்தான் அவர் மகன் சரவணன் கொரனா காலத்தில் இறந்தார் என்றால் சரிதான். ராமச்சந்திரனை 1ம் பிரதிவாதிதான் கவனித்துக்கொண்டார் என்றால் சரியல்ல. நாங்கள் ஒன்றாகத்தான் இருந்தோம். நடராஜன் வீட்டிலிருந்துதான் ராமச்சந்திரன் வீட்டிற்கு உணவு சமைத்து அனுப்புவார்கள் என்றால் சரியல்ல. எங்கு வேண்டுமானாலும் சமைத்து உணவை மாற்றி அனுப்புவார்கள்.

8. 1ம் பிரதிவாதி மற்றும் நடராஜன் குடும்பத்தார் ஒன்றாக வசித்ததாக எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. ராமச்சந்திரன் இறந்தபின் அவர் சொத்துக்களை அபகரிக்க முயற்சி செய்வதாக 4ம் பிரதிவாதி நடராஜன் குடும்பத்தார் மீதும், என்மீதும் புகார் அளித்த விவரம் தெரியுமா என்றால் என்னை போலிசார் விசாரணைக்கு அழைத்ததால் என்மீது உள்ள புகாரைப்பற்றி மட்டும் தெரிந்துகொண்டேன். மேற்படி விசாரணையில் தப்பிக்க நடராஜன் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்தவிவரம் நடராஜனுடன் வாய்தாவுக்கு வந்ததால் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.

9. ராமச்சந்திரனின் குடும்ப விஷயத்தில் நான் தலையிட்டதால் அவர் என்னை திட்டி வெளியேற்றியதால் அவர்மீது உள்ள கோபத்தில் ராமச்சந்திரனின் சொத்துக்களை அபகரிக்க முயற்சி செய்யும் நடராஜனுடன் சேர்ந்து கொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கில் சொல்லியுள்ளதுபோல் 21.12.2020 தேதியிலோ அல்லது வேறு தேதியிலோ ராமச்சந்திரன் எந்த உயிலும் எழுதி வைக்கவில்லை என்றாலும் நடராஜன் குடும்பத்ினருடன் சேர்ந்துகொண்டு உயிலில் கையெழுத்து செய்ததாக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10. நான் சொல்வதுபோல் மதியம் 12.00 மணிக்கு ராமச்சந்திரன் வீட்டில் வைத்து உயில் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. நான் சென்றபோது உயில் எழுதி முடிக்கப்பட்டிருந்தது. நான் சென்றபின் கையெழுத்து மட்டும் தான் செய்தோம். ராமச்சந்திரன் வீட்டிற்கு சென்றவுடன் கையெழுத்து மட்டும் தான் செய்ததாக சொல்கிறேன் என்றால் சரிதான். ஒரு உயிலில்மட்டும்தான் கையெழுத்து செய்தேன், அதற்கு நகல் எதுவும் இல்லை. ராமச்சந்திரன் கடைசி காலத்தில் மருத்துவமனைக்கு வெளியூர் செல்வதற்கு 1 மற்றும் 4 பிரதிவாதிகள் அவருடன் சென்றார்கள் என்றால் சரியல்ல. நடராஜன் அழைத்துச்சென்றபோது 4ம் பிரதிவாதி மட்டும் ஒருநாள் வந்தார்.

11. ராமச்சந்திரனுக்கு மருத்துவ உதவிகளை நடராஜன்தான் செய்தார் என்று முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் 21.12.2020ம் தேதி ராமச்சந்திரன் வீட்டில் வைத்து உயில் எழுதவில்லை என்றாலும் அந்த தேதியில் அவர் உடல்நலம் இல்லாமல் மதுரையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையில் இருந்தார் என்றாலும் நான்

சொல்வதுபோல் ராமச்சந்திரன் உயில் எழுதவில்லை என்றாலும் உயிலில் நான் கையெழுத்து செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

12. நான் நடராஜன் குடும்பத்தினருக்கு வேண்டிய நபர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/- M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.